தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஹேவிளம்பி, ஆனி 29, திருவள்ளுவர் ஆண்டு 2048

2017 ஜூலை 13, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வெள்ளத்து அனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு."

தண்ணீரில் மலர்ந்திருக்கும் பூவினுடைய தண்டினது நீளம் தண்ணீர் உயரத்திற்கு இருக்கும். அதேபோல், ஒருவர் உள்ளத்தில் ஊக்கம் எந்த அளவு இருக்கின்றதோ, அந்த அளவிற்கு உயர்வு இருக்கும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 191, மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

191—

சாலை அமைத்தல்

***4479—திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சாத்தாம்பாடி ஊராட்சி, சாத்தாம்பாடியிலிருந்து ரெட்டியபட்டி ஊராட்சி, கவரப்பட்டி வரை சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2017 ஜூலை 13

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

நத்தம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர், மாண்புமிகு திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள், அவருடைய தொகுதிக்குட்பட்ட சாத்தாம்பாடி ஊராட்சி, சாத்தாம்பாடியிலிருந்து ரெட்டியபட்டி ஊராட்சி, கவரப்பட்டி வரை சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டிருக்கிறார்கள்.

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், நத்தம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சாத்தாம்பாடி ஊராட்சியிலிருந்து ரெட்டியபட்டி ஊராட்சி, கவரப்பட்டி வரை உள்ள சாலை பெருமலை காப்புக் காட்டிற்குள் வருவதால், வனப் பாதுகாப்புச் சட்டம் 1980–ன்படி, மத்திய அரசின் முன்னனுமதி பெறவேண்டும். எனவே, சாலை அமைக்கக்கோரும் துறையான ஊரக வளர்ச்சித் துறையானது, மத்திய அரசின் இணையதளத்தின்மூலம் விண்ணப்பிக்கும்பட்சத்தில், வனத் துறை உரிய தொடர் நடவடிக்கை எடுத்து, அப்பகுதியில் சாலை அமைக்க ஆவன செய்யும் என்ற தகவலை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் செயல் தலைவர், மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.

நத்தம் தொகுதி, சாத்தாம்பாடி ஊராட்சி, சாத்தாம்பாடியிலிருந்து கவரப்பட்டிக்குச் செல்லும் சாலை வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. அந்தச் சாலையில் சுமார் 500 மீட்டர் தூரம் மட்டும் வனச் சாலையாக உள்ளது. அப்பகுதியிலுள்ள மக்கள் தங்களின் விவசாய விளைபொருட்களை எடுத்துச் செல்லவும், மருத்துவமனைகளுக்குச் செல்லவும், மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவும் மற்றும் இதர பணிகளுக்காகவும் சுமார் 12 கிலோ மீட்டர் தூரம் சுற்றிச் செல்ல வேண்டியுள்ளது. ஆகவே, மத்திய அரசின் அனுமதியைப் பெற்று, அந்தப் பகுதியில் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும், இதுபோன்ற

2017 ஜூலை 13]

வனத் துறை சாலைகள் நத்தம் தொகுதியில் இன்னும் உள்ளன. லிங்காவடி ஊராட்சி, லிங்காவடி மலை ஊருக்கு எல்லைப்புற வழியாகச் செல்லும் சாலை, குட்டுப்பட்டி ஊராட்சி; சேத்தூர் ஊராட்சியில் மாணிக்கம்கடையிலிருந்து சின்னமலையூர்; வலசு, பெரியமலையூர் ஆகிய கிராமங்களுக்குச் செல்லும் சாலைகள் உள்ளன. எனவே, தமிழகத்தில் வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 500 மீட்டர், 1 கிலோ மீட்டர், 2 கிலோ மீட்டர் தூரம் உள்ள சாலைகளை அமைத்துத் தருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டி அம்பலம் அவர்கள் குறிப்பிட்ட கவரப்பட்டி கிராமம், பெருமலை காப்புக் காட்டை ஒட்டி அமைந்துள்ளது. நத்தத்திலிருந்து கவரப்பட்டிக்குச் செல்ல நல்ல ரோடு வசதி உள்ளது என்பதால், வத்திப்பட்டி வரை பேருந்து வசதியும் இருக்கிறது. மீதமுள்ள இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்குச் சாலை வழியாக மக்கள் கவரப்பட்டிக்கு நடந்து செல்கிறார்கள்.*

அதேபோல, சாத்தாம்பாடிக்கு நத்தத்திலிருந்து கவரப்பட்டி செல்ல, வத்திப்பட்டி வழியாகச் செல்லும் சாலை சற்று அதிக தூரம்; அதாவது, 12 கிலோ மீட்டர் தூரம் இருப்பது தெரியவருகிறது. இருப்பினும், அப்பகுதிக்குக் குறுக்கு வழியில் செல்லவேண்டுமானால், பெருமலை காப்புக்காட்டின் ஊடேதான் சாலை வசதி செய்யப்படவேண்டும். ஏற்கெனவே பஸ் வசதிகள் இருப்பதால், இப்போது பொது மக்கள் அதிகமாக அந்தச் சாலைகளைப் பயன்படுத்துவதில்லை என்று அறிக்கை வாயிலாகத் தெரியவருகிறது. சாத்தாம்பாடிக்கும், கவரப்பட்டிக்கும் இடையே பெருமலை காப்புக்காடு உள்ளதால், காப்புக்காட்டின் வழியே சென்றுவர பாதை உரிமம் ஏதும் அறிவிக்கையில் அனுமதிக்கப்படவில்லை. எனவே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல், வனப் பகுதியில் சாலை அமைக்க, சம்பந்தப்பட்ட ஊரக வளர்ச்சித் துறை, மத்திய அரசின் அனுமதியைப் பெறுவதற்கு இணையதளத்தின்மூலம் விண்ணப்பித்தால், வனத் துறையானது, திண்டுக்கல் மாவட்ட D.F.O. மூலமாகத் தொடர் நடவடிக்கை எடுத்து, அப்பகுதியில்

சாலை அமைக்க ஆவன செய்யும் என்கிற விவரத்தினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரெட்டியபட்டி ஊராட்சி, காசம்பட்டி வனச் சரகம், அழகர் மலையில் வனத் துறையின் கட்டுப்பாட்டில் சின்ன அருவியில் ஒரு தடுப்பணையும், இலவன்குடியில் ஒரு தடுப்பணையும் கட்டித் தரவேண்டும். சுமார் 18 கிராம சுற்றுவட்டார மக்கள் நீர் ஆதாரத்தைப் பெறவும், குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கவும், இவ்விரு தடுப்பணைகளையும் கட்டித் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் 2006 முதல் 2011 வரை ஆட்சி செய்தபோது, நத்தம் தொகுதிக்கு 38 கிலோ மீட்டர் அளவுக்கு வனச் சாலைகள் அமைக்க 208.2 இலட்சம் ரூபாய் செலவிட்டிருக்கின்றார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், 2012–2017 வரையில், 52.14 கிலோ மீட்டர் அளவுக்கு வனச் சாலைகள் அமைக்க ஏறத்தாழ 711 இலட்சம் ரூபாய் நத்தம் தொகுதிக்கு மட்டும் செலவு செய்திருக்கின்றார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே தடுப்பணைகள் கட்டித் தரப்பட வேண்டும் என்றும் கேட்டிருக்கின்றார்கள். எங்கள் திண்டுக்கல் மாவட்டத்திற்கு நான் பல நிகழ்ச்சிகளுக்குச் சென்றிருந்தபோது, அங்கே இருக்கின்ற விவசாயப் பெருமக்கள் மற்றும் எல்லோரும் அந்தச் சாலைகள், தடுப்பணைகள் அவசியம் என்றும் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டி அம்பலம் அவர்களும் இப்போது குறிப்பிட்டிருப்பதால், இந்த நிதியாண்டில் நிதி வசதிக்கேற்ப, அவர் குறிப்பிட்ட சாலை வசதிகள், தடுப்பணைகள்

2017 ஜூலை 13]

கட்டித் தருவதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.*

திரு. அ. பிரபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஒன்றியம், நின்னையூர் ஊராட்சியிலிருந்து கூத்தக்குடி ஊராட்சிக்குச் செல்ல வேண்டுமென்றால், சுமார் 15 கிலோ மீட்டர் தூரம் சுற்றிக்கொண்டுதான் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அங்கே நின்னையூர் ஊராட்சி, கொட்டையூர் ஊராட்சி, பொறையூர் ஊராட்சி ஆகிய ஊராட்சிகளில் உள்ளவர்கள் வங்கி மற்றும் மருத்துவமனைக்குச் செல்லவேண்டுமென்றால், கூத்தக்கூடி ஊராட்சிக்குத்தான் செல்ல வேண்டியிருக்கின்றது. நின்னையூர் ஊராட்சியிலிருந்து கூத்தக்குடிக்குச் செல்கின்ற அந்த வனச் சாலை, மண் சாலையாக உள்ளது. இந்த வனச் சாலையின் வழியாகச் சென்றால், 2 கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கின்றது. ஆகவே, கூத்தக்குடியிலிருந்து நின்னையூர் செல்லும் அந்த வனச் சாலையை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரபு அவர்கள், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அந்தப் பகுதிக்கு சாலை வசதி கேட்டிருக்கின்றார். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன் போன்றவர்கள் எல்லாம் இதுகுறித்து கேள்வி கேட்டபோது, 'அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்' என்று சொல்லியிருக்கின்றேன். ஏற்கெனவே 2012–2017 வரையிலான மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், அந்தப் பகுதியில் ஏறத்தாழ 1.70 கிலோ மீட்டர் சாலை 40 இலட்சம் ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரபு அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியை ஆய்வு செய்து, நிதிநிலைக்கு ஏற்ப செய்து தரப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*